**நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியிம் - 2019**

-----------------------------------------------------------------------------------------------

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 எஸ்ஆர்ஜ(சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 09 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,879 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 12.20 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,540 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதில் ரூபா 884 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியன் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 995 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.46 மில்லியன் மிகுதி தொகை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(01)(அ) பிரிவு | ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கிரயத்தில் ஒப்பந்தமொன்றை ஏற்றுக்கொள்ளுகின்ற ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் 60 நாட்களினுள் பொது ஒப்பந்தப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். மேலும் ஒப்பந்த உடன்படிக்கை பொது ஒப்பந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் சிவில் நிர்மாணம் மற்றும் விநியோகங்களில் ஈடுபட்ட ஒப்பந்ததாரர்கள் இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | சட்டரீதியான தன்மை மற்றும் வரிவிதிப்பு தொடர்பான விடயங்கள் மீது ஒப்பந்ததாரரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு ஒப்பந்ததாரர்களிற்கு வழிகாட்டலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமாகும். |
| (ஆ) | 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டம் | வடிவமைப்பு மற்றும் மதியுரையாளர் பெறுகையின் போது ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் சட்ட அம்சங்களிலிருந்து விலகிச்செல்லல். | கருத்துரை வழங்கப்படவில்லை. | விதிகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் 02 மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய கூட்டங்களெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் செயற்திறனாக மேற்கொள்ளப்படாது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஆண்டொன்றிற்கு நான்கு நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டங்களெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் செயற்திறனாக மேற்கொள்ளப்படாது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| வெளிநாட்டு கூட்டுமுயற்சி பங்காளருடன் தனியார் கம்பனியொன்று மதியுரையாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் வேலை ஆரம்பிப்பு முற்பணங்களாக ரூபா 50.11 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் ஆண்டின் போது பௌதீக செயன்முன்னேற்றமெதுவும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தாமதங்களுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும். | உப செயற்திட்டங்களை இனங்காண்பதற்கு தேவை மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி முன்மொழிவு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஒப்பந்த காலப்பகுதியினுள் தேவையான மட்டத்தை உடனடியாக உறுதிப்படுத்தி வேலையை பூர்த்தி செய்வதற்கு மதியுரையாளரிற்கு வழிகாட்டலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | பரீட்சிப்பு அறிக்கை, மாதாந்த அறிக்கை மற்றும் காலாண்டு அறிக்கை போன்றன பெறப்படாமல் மதியுரையாளரிற்கு ரூபா 5.92 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான மட்டம் உடனடியாக உறுதிப்படுத்தப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்படமாட்டாது. | பரீட்சிப்பிற்கு முன்னர் மாதாந்தம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காலாண்டு அறிக்கைகள் பெறப்படுகின்றன. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் செயற்திட்டக் கணக்காளர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் முழுமையான பதவியணியினருடன் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் மாகாண மட்ட செயற்திட்ட அமுல்ப்படுத்தல் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக தாமதத்துடன் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும். | சனாதிபதி தேர்தல் காரணமாக நியமனங்களை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் சனாதிபதி செயலாளரால் சுற்றிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட அமுல்ப்படுத்தல் பிரிவுகளிற்கான முழுமையான பதவியணியுடன் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |